# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
புரட்டாதி 9
ஷவ்வா பிறை 11
ஞாயிறு (25-9-77)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 31

விலை சதம் 60


# தமிழ்ஈழம் அமைப்பதற்கு தமிழருக்கு உரிமையுண்டு!

## அசோக் மேத்தாவுக்கு ஒரு விளக்கம்!

ஈழத்தமிழர் பிரச்சினையில் — இந்தியத் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி— வட இந்தியத் தலைவர்களும் அக்கறையும், கரிசனையும் காட்டத் தொடங்கியிருப்பதை இந்தியாவின் முதுபெரும் அரசியல் தலைவர்களில் ஒருவரும் ஆளும் ஜனதாக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான அசோக் மேத்தா அவர்கள் சென்னைப் பத்திரிகைகளுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி முதல் தடவையாக அளித்துள்ள ஒரு பேட்டி எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இலங்கையில் அண்மையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற சிங்கள இனவெறிக் கொடுமைகள் மனித உள்ளம் கொண்டோர் அனைவரையும் இதுபற்றி சிந்திக்கத் தூண்டியுள்ளது என்பதை அசோக் மேத்தாவின் பேட்டி நன்கு உணர்த்துகிறது.

''இலங்கை போன்ற அயல் நாடொன்றின் உள் விவகாரங்களில் தலையிடுவதை தானும் இந்திய அரசும் தவிர்த்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் இலங்கை தமிழ் மக்களுக்கு அண்மையில் நேர்ந்தவை குறித்து தனது உணர்வுகளை வெளியிடுவது தமது கடமை'' என்று திரு. மேத்தா அவர்கள் கூறியிருக்கிறார்கள்! அந்த அளவுக்கு தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகள் கண்டு அவரது மனித உள்ளம் பொங்கியெழுந்துள்ளது என்பது இதிலிருந்து தெரிகிறது.

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கச் செய்வதற்கு அவர் பின்வரும் ஆலோசனைகளை இலங்கை அரசுக்கு வழங்கியிருக்கிறார்.


(1) இலங்கையில் வாழும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் எல்லாத்துறையிலும் சம உரிமை இருக்கவேண்டும்.

(2) சிங்கள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் சமத்துவம் அளிக்கவேண்டும்.

(3) தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்த ஒரு சமஷ்டி அரசியலமைப்பு முறையை இலங்கை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவைதாம் அசோக்மேத்தா அவர்கள் இலங்கை அரசுக்கு வழங்கியுள்ள மூன்று ஆலோசனைகளாகும். மேற்கண்ட மூன்று கோரிக்கைகளையும் முன் வைத்து கடந்த முப்பது ஆண்டுகளாக இலங்கைவாழ் தமிழ்மக்கள் போராடியும், வாதாடியும் ஒப்பந்தங்கள் செய்தும் சிங்கள அரசுகளால் தொடர்ச்சியாக ஏமாற்றப்ப

(4ம் பக்கம் பார்க்க)



சிங்கள இன வெறி பிடித்த காக்கிச் சட்டைக் காடையர்கள் வைத்த தீயில் யாழ்ப்பாணத்துக் கடைகள் எரிகின்ற உள்ளம் குமுறுகின்ற காட்சி இது.

## அரசியலமைப்பு திருத்த விவாதம்;

## தமிழர் விடுதலைக்கூட்டணி பங்குபற்ருது!

சிறீலங்காவின் அரசியலமைப்புக்கு ஐ. தே. கட்சி அரசு தேசிய அரசுப் பேரவையில் கொண்டு வரும் திருத்தங்களையொட்டிய விவாதங்களிலும் வாக்கெடுப்பிலும் தமிழர் விடுதலை கூட்டணி பங்குபற்ருது என்று தெரிகிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்புத் திட்டத்தை தமிழ் மக்கள் முற்ருக நிராகரித்து விட்டதாலும் தமிழ் ஈழத்துக்கென தனியான அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் ஆணைவழங்கியுள்ள படியாலும், கூட்டணி பா. உ. க்கள் அரசியலமைப்பு திருத்த விவாதத்தில் பங்கு பற்றமாட்டார்கள் என்று தெரியவருகிறது.

1972-ம் ஆண்டு மே 22-ம் திகதி நடைமுறைக்கு வந்த அதே அரசியலமைப்புக்கே இப்போது திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இந்த மூல அரசியலமைப்பு தமிழ் மக்களின் இணக்கத்தையும், சம்மதத்தையும் பெருமலே அரசியல் நிர்ணய சபையில் சிங்கள மக்களின் பிரதிநிதிகளினுல் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்டது. இந்த அரசியலமைப்பை உருவாக்குவதில் தமிழ் மக்களின் பெரும்பாலான பிரதிநிதிகள் பங்கு பற்ருததுடன், அரசியல் நிர்ணய சபையையும் பகிஷ்கரித்தனர். தமிழ் மக்களின் இணக்கத்தை துளிகூட பெருமல், அவர்களது எதிர்ப்பின் மத்தியில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் அவர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ளது.

1975-ம் ஆண்டு காங்கேசன் துறை இடைத்தேர்தலின் போதும் – 1977 பொதுத்தேர்த

(8ம் பக்கம் பார்க்க)



திருகோணமலையில் இதயத்தில் அன்பே அற்ற சிங்கள இன வெறியர்களின் கத்திக் குத்துக்குப் பலியாகி உயிரிழந்த அன்புவழிபுரத்தைச் சேர்ந்த 29 வயது தமிழ் இளைஞன் பசுபதி இராசதுரை.

## தமிழர் தரும் வரிப்பணத்தில் பௌத்தமத அபிவிருத்தி!

இந்நாட்டில் வாழும் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய தமிழ்பேசும் மக்கள் தருகின்ற வரிப்பணத்தைக்கொண்டு தமிழ் பிரதேசமாகிய திருகோணமலையில் பௌத்த கோவில்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு புதைபொருளாராய்ச்சித் திணைக்களம் இரண்டு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

சேருவாவிலை மங்கள ரஜ மகா விகாரையைச் செப்பனிடுவதற்கு மட்டும் ஒரு இலட்சம் ரூபா செலவிடப்படும். திரியாயிலுள்ள ''கிரிகந்த சேயா'' என்ற பௌத்த கோவிலைச் செப்பனிட 75,000 ரூபாவும், வில்கம் விகாரையை செப்பனிட 50,000 ரூபாவும் ஒதுக்கப்படும். கந்தளாய்க்கு அப்பால் மகாவலி

(8ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஈழத்தேசத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிங்களக் குடும்பத்துக்காக ஊர் முழுவதும் தாக்கப்பட்டது!

## மட்டக்களப்பில் நடைபெற்ற சிங்கள பொலீஸ் வெறியாட்டம்!

**1977 ஆகஸ்ட் பிற்பகுதியில் இடம்பெற்ற தமிழ் இனக் கொலையின்போது தமிழ் ஈழத்தின் எந்த ஒரு பகுதியும் சிங்களப் பொலீசாரின் திட்டமிட்ட இனவெறித் தாக்குதலுக்குத் தப்பவில்லை; யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு நகரங்களில் பொலீசாரின் வெறித்தாக்குதல் உச்சக் கட்டத்தில் இடம்பெற்றிருந்தது — யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி நமக்குக் கிடைத்த தகவல்களை முந்திய இதழ்களில் வெளியிட்டிருந்தோம்— இதோ மட்டக்களப்பில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் பற்றி நமக்குக் கிடைத்த தகவல்களை இங்கு தருகிறோம். மட்டக்களப்பில் ஒரு சில சிங்களக் குடும்பங்களுக்காக ஊர் முழுவதையுமே அடித்து நொருக்கினர் சிங்களப் பொலீசார்.**

22-8-77ல் சிங்களவரான தொலைபேசி இயக்குனர் ஒருவரும், மட்டக்களப்பு மருத்துவமனை தொழிலாளர் கண்காணிப்பாளரான மற்றோர் சிங்களவரும் தத்தம் உடமைகளுடன் மருத்துவமனைக்கு சொந்தமான ஒரு வாகனத்தின் மூலம் பிராந்திய வைத்திய அதிகாரியின் (இவரும் ஒரு சிங்களவர்) அனுசரணையுடன் தமது குடும்பங்களுடன் வந்து மருத்துவமனையில் வந்து குடியேறினர். அவர்கள் அங்கு அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளதாக சொல்லிக் கொள்ளப்பட்டது.

ஆனால் வந்தவர்கள் அகதிகள் போல நடந்துகொள்ளவில்லை; அன்று மாலை சிங்களப் பொலீசாருடன் சேர்ந்து குடித்துக் கும்மாளம் அடித்தார்களாம். நிறைபோதையில் தள்ளாடியபடி காட்சியளித்த இவர்கள் அப்பாவித் தமிழ்ப்பெண் தாதிமார் தங்கும் அரசினர் விடுதிக்குள் அத்துமீறி நுளைந்து, அவர்களிடம் கைக்குண்டுகள் இருப்பதாகவும், அவற்றைத் தாம் பார்வையிட வேண்டுமென்றும் வற்புறுத்தியதுடன் மதுவெறியில் ஏவறுதகாத வார்த்தைகளையும் பேசியிருக்கிறார்கள்.

வெளியார் சிலர் அரசினர் விடுதிக்குள் பலவந்தமாக நுழைந்து பெண்தாதிமாருடன் தொல்லைக்குப்போன இந்த அநியாயச் செயலை ஆட்சேபித்து 23-8-77ல் மட்டக்களப்பு மருத்துவமனை தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்தனர். இதையடுத்து அன்று காலை 9 மணிக்கு நிலைமையை ஆராய ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் பிராந்திய வைத்திய அதிகாரி, வைத்திய கண்காணிப்பாளர், மட்டக்களப்பு பா. உ. திரு. செ. இராசதுரை ஆகியோரும் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் மருத்துவமனையில் குடியேறிய இரண்டு சிங்களக் குடும்பங்களும், மருத்துவ மனையிலிருந்து வெளியேற்றப்பட்டு வேறு இடத்துக்கு கொண்டுசெல்லப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

### தாக்குதல் ஆரம்பம்

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் காலை 10.30 மணியளவில் மருத்துவமனைக்குச் சொந்தமான L. R. T. வாகனம் ஒன்று, மார்பு சிகிச்சை நிலையத்தின் முன்னால் குண்டாந்தடி தாங்கிய பொலீசாரையும், மருத்துவமனையின் பிரதான வாயிலின் முன் துப்பாக்கி ஏந்திய பொலீசாரையும் கொண்டுவந்து இறக்கிவிட்டுச் சென்றது. பொலீசார் சீருடையின்றி, சாதாரண உடையிலேயே காணப்பட்டனர். இப்படி இறக்கிவிடப்பட்ட பொலீசார், அங்கு நின்ற தமிழ் பொதுமக்களையும் சிகிச்சைக்காக வந்த நோயாளரையும் மருத்துவ மனையில் வேலைசெய்யும் தமிழ் தொழிலாளர்களையும் தாக்கத் தொடங்கினர். பொலீசாரின் இந்த வெறித்தாக்குதலை இராணுவ வீரர் ஒருவரும் பார்த்துக்கொண்டு நின்றார். இந்த அநியாயச் சம்பவங்கள் வெளிநோயாளர் பிரிவிலும் அதன் அருகிலும் இடம்பெற்றன.

### மதகுருவும் தாக்கப்பட்டார்

இச்சம்பவங்களின் எதிரொலியாக அதே நாள் பிற்பகல் சேற்றுக்குடா எனும் பகுதியில் யாரோ ஒருவர் ஒரு பொலீஸ்காரரை கத்தியால் குத்தியதாகக் கூறப்பட்டது. இதனையடுத்து கோட்டைமுனையிலுள்ள மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தின் முன்னால் அப்போது கடமையிலீடுபட்டிராத சிங்களப் பொலீசார், அவ்வீதியால் வந்த அப்பாவிப் பொதுமக்களையும், அரசாங்க ஊழியர்களையும் தாக்கினர். இத்தாக்குதலின் போது, மட்டக்களப்பில் சுதந்திரன் விற்பனை செய்யும் 'குமரன் ஸ்ரோர்ஸ்', சிவசக்தி நூல் நிலையம் ஆகிய கடைகள் உட்பட சில கடைகள் அடித்து உடைக்கப்பட்டன. ஆம், காவல் நிலையத்துக்கு முன்னாலேயே காவலர்கள் காடையர்களாக நடந்து கொண்டதை மட்டக்களப்பு அன்று கண்டது.

24-8-77 ம் திகதியும் சிங்களப் பொலீசாரின் இனவெறித் தாக்குதல் தொடர்ந்தது. தெருவில் போவோர், வருவோர், சுகாதார திணைக்களத் தொழிலாளர்கள், வங்கி ஊழியர்கள், பொதுமக்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டனர். இத்தாக்குதலின் போது கத்தோலிக்க மதகுருமாரையும் பொலீசார் விட்டுவைக்கவில்லை, இரு கத்தோலிக்க குருமாரும் தாக்கப்பட்டனர். அவர்களது சைக்கிள் வண்டிகள் உட்பட, தெருவில் சென்ற பலரது சைக்கிள் வண்டிகள் அடித்து முறிக்கப்பட்டு வாவிக்குள் வீசப்பட்டன. இவ்வட்டூழியங்கள் அனைத்தையும் செய்து முடித்தவர்கள் ஒரு சில சாதாரண உடை அணிந்த சிங்களப் பொலீஸ்காரர்களே.

அன்று இரவு, ஊரடங்குச் சட்டம் அமுலிலிருக்கும்போது தமிழ் மீனவரின் வள்ளங்கள் அடித்து உடைத்து சேதப்படுத்தப்பட்டன.

### வேலை நிறுத்தம்

25-8-77ல் சிங்களப் பொலீசாரின் இந்த வெறியாட்டத்தை ஆட்சேபித்து, மட்டக்களப்பில் பூரண வேலை நிறுத்தம் நடைபெற்றது. அரசாங்க ஊழியர்கள், மருத்துவமனை ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் ஆகியோர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர், இதன் பின்னர் நடைபெற்ற ஒரு சமரச மாநாட்டில், தரைப்படைத்தளபதியும், பொலீஸ் கண்காணிப்பாளரும் பொலீசாரின் அட்டகாசத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக உறுதியளித்ததுடன், பொலீசார் ஏற்படுத்திய சேதங்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமென்றும் உறுதியளித்தனர்.

29-8-77ல் ப. நோ. கூ. சங்கத்திற்கு சொந்தமான இரண்டு லொறிகள் சீனி ஏற்றுவதற்காக ஹிங்குராணைக்குச் சென்றபோது, அங்குவைத்து மேற்படி லொறி சாரதிகள் இருவரும் கிளீனரும் சிங்களத் தொழிலாளர்களினால் தாக்கப்பட்டனர். இதனால், 30-8-77, 31-8-77 ஆகிய நாட்களில் மட்டக்களப்பு ப. நோ. கூ. ச. ஊழியர்கள் வேலை நிறுத்தத்திலீடுபட்டனர்.

இவை தவிர, மட்டக்களப்பு பன்சாலை வீதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் வருமாறு:-

22-8-77 இரவு மட்டக்களப்பு பன்சாலை வீதியிலுள்ள விமலரத்தின என்ற சிங்களவரின் வீட்டில் ஒரு 'விருந்து' நடந்துகொண்டிருந்தது; அதில் 'லங்கா பேக்கரிக்கு' பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த இரு பொலீஸ்காரர்களும் பங்குபற்றினர்கள். அப்போது, விருந்து நடந்துகொண்டிருந்த குறித்த சிங்கள வீட்டுக்கும், மற்றும் இரண்டு தமிழ் வீடுகளுக்கும் எங்கிருந்தோ சில கற்கள் வீசப்பட்டன. உடனே அங்கிருந்த பொலீசார் ஓடோடிச் சென்று அக்கம் பக்கம் உள்ள வீடுகளில் [illegible] போது — குறிப்பிட்ட தேநீர் கடை உரிமையாளர் தனது வீட்டில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவரது ஒரு கால் சரியாக வழங்காததாலும், அவர் 60 வயது முதியவர் என்பதாலும் அவர்மீது சந்தேகப்படாது அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

அதே நாளில் பி. ப. ஒரு மணிக்கு தனது அடுப்படி தீப்பிடித்து எரிவதாக திருமதி விமலரத்தின சத்தமிட்டிருக்கிறார். அப்போது குறித்த தேநீர் கடைக்காரர் தனது கடையில் வாடிக்கையாளருக்கு தேநீர் வழங்கிக் கொண்டிருந்தார். சிங்களப் பெண்மணி பொலீசுக்கு முறையிட்டதைத் தொடர்ந்து, உடனடியாக ஸ்தலத்துக்கு வந்தபொலீசார், அப்பகுதியில் காணப்பட்ட தமிழர்களையும் தேநீர்கடையிலிருந்தோரையும் மோசமாகத் தாக்கிவிட்டு தேநீர்கடை உரிமையாளரை பொலீஸ் நிலையம் வரை கூட்டிச்சென்று வாக்கு மூலம் பெற்றுக்கொண்டு விட்டனர்.

25-8-77 அதிகாலை 4 மணிக்கு இதே சிங்களப் பெண் தனது அடுப்படி தீப்பிடித்து எரிவதாக மீண்டும் சத்தமிட்டிருக்கிறார். இதனால் அங்கு வந்த பொலீசார் குறித்த தேநீர் கடைக்காரரையும், அவரது தம்பியாராகிய இ. போ. ச. கண்டக்டர் ஒருவரையும் கடுமையாகத் தாக்கியதுடன் பொலீஸ் நிலையம் கொண்டு சென்று லாக் அப்பில் அடைத்தனர்.

அதேநாள் பகல் 12 மணிக்கு மீண்டும் இந்த சிங்களப்பெண் தனது அடுப்படி தீப்பிடித்து எரிவதாக மூன்றுவது தடவையாக சத்தமிட்டிருக்கிறாள். இதே நேரத்தில், குறித்த சிங்களப் பெண்மணியின் மூத்த மகளே எரிகின்ற விறகுக் கட்டை இரண்டையெடுத்து தீமூட்டியதை இன்னோர் இளம் பெண் தற்செயலாகக் கண்டிருக்கிறாள். ஏன் உனதுவீட்டை நீயே எரிக்கிறாய் என்றும் அவளைக் கேட்டிருக்கிறாள்.

அதே நாள் மாலை 5 மணிக்கு பொலீசார் சாதாரண உடையில் தேநீர்கடைக்குள் புகுந்து அங்கிருந்த பொருட்களை துவக்குப் பிடியால் அடித்து தூள்தூளாக்கி துவம்சம் செய்துள்ளனர். பொலீசாரின் இந்தக் கொடுமைக்கு பயந்து அக்கம் பக்கத்திலுள்ள குடும்பங்கள் அனைத்தும் வெளியேறியுள்ளன.

இந்தக் கொடுமைகள் பற்றி அக்கம்பக்கத்திலுள்ள சிங்களக் குடும்பங்களே சாட்சி சொல்லத் தயாராகஉள்ளன. குறித்ததேநீர் கடை உரிமையாளர் பொலீஸ் தாக்குதலின் காரணமாக இப்போது தனது அன்றுட சீவியத்துக்கே வழியின்றி இருக்கிறார். தாக்குதலுக்கு உள்ளான இந்த தேநீர்கடை உரிமையாளர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்; நடைபெற்ற தேர்தலில் காசி ஆனந்தனுக்காக உழைத்தவர்.

வன்முறையிலீடுபட்ட பொலீசாரின் பெயர்களையும், அவர்களது இலக்கங்களையும் குறித்து, இது சம்பந்தமான முறையீடு ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு மட்டக்களப்பு மக்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

தமிழ் ஈழத்தில் காக்கிச்சட்டையணிந்த சிங்களக் காடையர்கள் தமிழர்களைத் தாக்குகிறார்கள் — தமிழ் ஈழத்துக்கு வெளியே காக்கிச்சட்டை அணியாத சிங்களக் காடையர்கள் தமிழர்களை தாக்குகிறார்கள்! இந்தக் கொடுமை அகன்றிட — தமிழன் தன்னைத் தானே ஆளவேண்டும்; சிங்கள ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வு தமிழ் மக்களின் நெஞ்சில் இப்போது மேலும் உறுதியாக வளர்ந்து வருகிறது.



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிங்களப் பொலீசாரின் இன வெறித் தாக்குதலின்போது கடைகள் உடைக்கப்பட்டுக் கிடக்கும் பரிதாபக் கோலம் காணீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களை ஆளுவதற்கு எவ்வகையிலும் சிங்களமக்களுக்கு அதிகாரமில்லை!

## எமது இறைமையை பயன்படுத்தி எமக்கோர் அரசியலமைப்பை உருவாக்குவோம்!

## தேசிய அரச பேரவையில் சிவசிதம்பரம்

**''1947 ம் ஆண்டு முதல் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்ட இந்த பலவந்த செயற்கை ஒற்றுமையை நாம் வன்மையாக எதிர்த்து வருகிறோம். 1956 ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும், நாம் இந்த நிலையை ஏற்க மறுத்தோம். இன்று இந்தச் சபைக்கு முன்பும், நாட்டின் முன்பும் எங்கள் பிரச்சினையை வைக்கின்ற இந்த நேரத்திலும் இந்த செயற்கை ஐக்கியத்தை நாம் ஏற்க மறுக்கிறோம். எனவே எங்கள் வரலாற்றை நீங்கள் பார்த்தீர்களானால் — 1833 ம் ஆண்டு கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுப்படி வெள்ளைக்கார எஜமானர்களால் பலவந்தமாக நாம் ஒன்றிணைக்கப்படும் வரை — நாம் தனி இராச்சியம் ஒன்றுடன் தனியாக வாழ்ந்து வந்திருப்பதை உங்களால் காணமுடியும்!**

அதிலும் — புதிய அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் எம்மை ஆளுவதற்கு உங்களுக்கு தார்மீக உரிமையோ — அல்லது சட்டரீதியான உரிமையோ கிடையாது என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஒரு தேசிய நாட்டினத்தை இன்னோர் தேசிய நாட்டினம் ஆளவேண்டுமானால் அதற்கு மூன்று வழிகளே உண்டு.

### மூன்று வழிகள்

முதலாவது - படையெடுத்து போர் நடத்தி போரில் கைப்பற்றுவதன் மூலம் ஒரு நாட்டை இன்னோர் நாடு ஆள முடியும். தமிழ் தேசிய இனத்தை சிங்களத் தேசிய இனம் எப்போதாவது போரில் வெற்றி கண்டிருப்பதாக இச் சபையில் எவராவது கருதுவார்கள் என்று நான் நம்பவில்லை.

ஈ. எல். சேனநாயக்கா:- தென்னிந்தியாவின் ஒரு பகுதி சிங்களவர்களால் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

சிவசிதம்பரம்:- இரண்டாவதாக புதிய அரசியலமைப்பின் கீழ் இணைந்து வாழ தமிழ் தேசிய இனமோ அந்த இனத்தின் பிரதிநிதிகளோ தமது சம்மதத்தை — இணக்கத்தைத் — தந்திருக்கவேண்டும்.

காமினி திசாநாயக்கா;- எந்தத் தமிழ் இனம்?

சிவா:- எனக்குத் தெரிந்தவரை ஒரேயொரு தமிழ் தேசிய இனந்தான் உண்டு. தமிழ் மக்களின் சம்மதத்தைப் பொறுத்தவரை — முந்திய அரசாங்கம் மக்கள் தமக்கு ஆணை தந்திருப்பதாகக் கூறி அதன் அடிப்படையில் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கியது. முந்திய அரசாங்கத்துக்கு நாட்டு மக்களில் ஒரு பகுதியினரே அந்த ஆணையை வழங்கினர் — நிச்சயமாகத் தமிழ் மக்கள் வழங்கவில்லை.

புதிய அரசியலமைப்பை வரைவதற்காக கூடிய அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் பங்குபற்றினார்கள்; அதன்பின் சபைக் கூட்டங்களை அவர்கள் முற்றாகப் பகிஷ்கரித்ததுடன், அரசியலமைப்புச் சட்டம் இறுதியாக உருவாகிய நாட்களில் தமிழர் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் அதிலே கலந்துகொள்ளவில்லை. இதன்மூலம் — புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றிடவில்லையென்பதை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் வெளிப்படையாக எடுத்துக் காட்டினார்கள்;

### காங்கேசன் இடைத் தேர்தல்

இந்தத் துறையில் கடைசி முயற்சியாக — தமிழ் மக்கள் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளுகிறார்களா இல்லையா என்ற பிரச்சினையை மையமாக வைத்து, காலஞ்சென்ற அமரர் செல்வநாயகம் அவர்கள் இச்சபையில் தாம் வகித்துவந்த காங்கேசன்துறை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து — இடைத்தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு, 16000 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்று, தமிழ் மக்கள் அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை உறுதிப்படுத்தினார்.

எனவே — ஒரு நாடு, இன்னோர் நாட்டை ஆளவேண்டுமானால் அதன் இணக்கத்தை — சம்மதத்தைப் பெறவேண்டும் என்ற இரண்டாவது காரணமும் இங்கு பொருந்தாது; தமிழ் மக்கள் தமது சம்மதத்தைப் புதிய அரசியலமைப்பிற்கு தர மறுத்துவிட்டனர்.

மூன்றாவது காரணம் — சட்டரீதியான தொடர்பு; புதிய அரசியலமைப்புக்கு பழைய சோல்பரி அரசியலமைப்புடன் ஏதாவது சட்டரீதியான தொடர்பு இருந்திருக்குமானால் — தமிழ்தேசத்தை ஆளுவதற்கு சிங்கள தேசத்துக்கு உரிமையுண்டென்று ஒருவர் கூறமுடியும். ஆனால் — சோல்பரி அரசியலமைப்பை திருத்துவதன்மூலம் புதிய அரசியலமைப்பை உருவாக்காமல் — பழைய அரசியலமைப்புடனுள்ள சட்டரீதியான தொடர்பை முற்றாக முறிக்கின்ற நோக்குடன் தான் — தனியாக வேறோர் அரசியல் நிர்ணய சபையாகக் கூடி புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது என்பதை திருமதி பண்டாரநாயக்கா ஏற்றுக்கொள்வாரென நம்புகிறேன்.

### இறைமை எம்மிடம்

அவர்கள் தமது கருத்தின்படி சரியாகக் கூறினார்கள் — 'நாம் பூரண இறைமை கொண்ட மக்கள்; அந்த இறைமையைப் பயன்படுத்தி

> **சிறீலங்காவில் தேசிய அரசுப் பேரவையில் 18-8-77ல் தமிழ் ஈழப் பிரேரணையை முன்மொழிந்து நல்லூர் பா. உ. வும் கூட்டணி செயலதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் உரையாற்றினார். அவரது உரையின் முதலாவது பகுதி சென்ற இதழில் இடம்பெற்றிருந்தது. இறுதிப் பகுதி இங்கு இடம் பெறுகிறது.**
>
> —ஆர்

புதிய அரசியலமைப்பை உருவாக்குகிறோம்'' என்று கூறினார்கள். சோல்பரி அரசியலமைப்பிலிருந்து அவர்கள் துண்டித்துக்கொண்டு விடுபட்டு போனபோது — சட்டரீதியான தொடர்பும் (Legal Continuity) துண்டிக்கப்பட்டு விட்டது. அவர்கள் தம்மீதே தமது இறைமை தங்கியிருப்பதாக கூறிக்கொண்டு அதன் அடிப்படையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கிக்கொண்டது போலத்தான் — எமது இறைமையும் எமது மக்களிடமே இருக்கின்ற காரணத்தினால் அதைப் பயன்படுத்தியே நாமும் எமது தமிழ் ஈழத்துக்கான அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ள விரும்புகிறோம்.

எனவேதான் நான் முன்னர் குறிப்பிட்டதுபோல — ஒரு தேசிய இனத்தை இன்னோர் தேசிய இனம் ஆளுவதற்கு இருக்கக் கூடிய மூன்று காரணங்களில் ஒரு காரணம் கூட உங்களுக்கு இல்லாத நிலையில் — எம்மை ஆளுவதற்கு தார்மீக ரீதியாகவோ — சட்ட ரீதியாகவோ உங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று நாம் கூறுகிறோம்.

ஆகவே எமக்கிருக்கும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நாம் இந்நாட்டில் எப்படி ஆளப்படவேண்டும் என்பதை முடிவு செய்வதற்கு எமக்கு ஒவ்வொரு உரிமையும் உண்டு என்று கூறுகிறோம்!

உலகவரைபடத்தை நீங்கள் பார்ப்பீர்களானால் — எத்தனையோ சின்னச் சின்ன நாடுகள், கடந்த பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கிடையில் சுதந்திரம் பெற்றுள்ளதைப் பார்ப்பீர்கள். இங்கு நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த சில நாடுகள் நாங்கள் கோரும் தமிழ் ஈழத்தை விட பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் குறைந்த நாடுகளாக இருந்ததைப் பார்த்தோம்.

### ஐ. நா. கொள்கை

எந்த ஒரு தேசிய இனம் தனித்துவாழ்ந்து, தனியாக இயங்கவேண்டுமென்று உறுதியுடன் முடிவுசெய்தால் — அந்தத் தேசிய இனத்துக்கு தனது எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கின்ற உரிமையை வழங்க வேண்டுமென்பது ஐக்கியநாடுகள் சபையினதும், அதன் அங்கத்துவ நாடுகளினதும் கொள்கையாக இன்று இருக்கிறது. மலேசியாவும் சிங்கப்பூரும் இரு நாடுகளினதும் விருப்பத்தின்பேரில் பிரிட்டிஷ் இராச்சியத்தில் ஒரே நாடாக இணைக்கப்பட்டிருந்தது! ஆனால் இப்படி இணைந்து வாழ்வது இரு நாடுகளுக்கும் நயம்பயக்கவில்லை யென்பதை கண்டுகொண்டதும், சிங்கப்பூர் தனியே பிரிந்து சென்று தனியாக அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள அமைதியாக வழிவிடப்பட்டது. இது சமாதானமாக நடைபெற்றது.

### ஸ்கொட்லாந்து

ஸ்கொட்லாந்தை எடுத்துப் பாருங்கள்; 1707 ம் ஆண்டு ஸ்கொட்லாந்தும், இங்கிலாந்தும் தாமாகவிரும்பி இணைந்து ஒரே நாடாக ஐக்கிய இராச்சியமாக ஆகியது. ஸ்கொட்டிஷ் பிரச்சினைகளை ஆராய்வதற்கென 1939ம் ஆண்டு தனியாக ராஜாங்க மந்திரியொருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் ஸ்கொட்லாந்தில் — ஸ்கொட்லாந்து தேசியக்கட்சி ஸ்கொட்லாந்து தனிநாடாக வேண்டுமென்று போராடி வருகிறது!

எனவே நமது கோரிக்கை உலகில் ஒன்றும் புதியதோ — புதுமை நிறைந்ததோ அல்ல; உலகில் எங்கும் நடைபெறாத நிகழ்ச்சியுமல்ல; அரசாங்கம் தமிழ் மக்களின் உணர்வுகளை. அபிலாசைகளை புரிந்துகொள்ள வேண்டும்.

உங்களுக்கு இதிலே ஏதாவது சந்தேகம் இருந்தால் — நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈட்டியுள்ள மகத்தான வெற்றி — அந்தச்சந்தேகங்களை போக்கியிருக்க வேண்டும். ஆகக்கூடிய பெரும்பான்மை வாக்குகளை கூட்டணிக்கு மக்கள் அளித்திருக்கிறார்கள். ஓரிரு தொகுதிகளைத்தவிர — பெரும்பாலான தொகுதிகளில் 10,000 மேலான அதிகப்படி வாக்குகளால் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றியீட்டியிருக்கிறது — தமிழ் மக்கள் கூட்டணிக்கு பின்னால் நிற்கிறார்கள்.

### முயற்சி தோல்வி

இந்த நட்டில் கடந்த 30 ஆண்டுகளாக சிங்கள மக்களுடன் கௌரவமாக சுயமரியாதையுடன் ஐக்கிய இலங்கையின் கீழ் சேர்ந்து வாழ்வதற்கு தமிழ்த் தலைவர்கள் முழு முயற்சி எடுத்து வந்திருக்கின்றனர்; ஆனால் அவர்கள் முடிவில் கண்டது ஏமாற்றந்தான்!

1947 ம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவிடம் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் வாதாடியதன் பயனாக சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு தரும் 29 வது விதி சோல்பரி அரசியலமைப்பிலே சேர்த்துக் கொள்ளப்பட்டது. அந்தப் பாதுகாப்பு புதிய அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. சிறுபான்மையினத்துக்கு மேலதிக தொகுதிகளை வழங்கும் பாதுகாப்புக்கூட மீறப்பட்டு, மலை நாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது!. இதன்மூலம் தமிழ் மக்களுக்கு சேரவேண்டிய கூடுதல் பிரதிநிதித்துவம் சிங்களவர்களுக்கே தரப்பட்டது.

இதனால் — தன்னுடைய இறுதிக்காலத்தில், சிங்களவர்களின் ஏமாற்றும் கொள்கையால் விரக்தியடைந்திருந்த அமரர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் — தாம் இறுதியாகப் பேசிய ட்ரயல்— அற் — பார் வழக்கின்போது தெட்டத்தெளிவாகப் பின்வருமாறு கூறியுள்ளார்.

''1935 ம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸ், முஸ்லிம்களின் நியாய பூர்வமான உரிமைகளை வழங்க மறுத்த காரணத்தினால் — பாகிஸ்தான் பிறந்தது. 1970 பதுகளில் தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# அரசு என்ன செய்யப் போகிறது?

யாழ்ப்பாணத்தில் 16-8-77 ல் பொலீசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது இருவர் மரணமடைந்தது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்ட யாழ்ப்பாண நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் அவர்கள் — இது சம்பந்தமான தமது தீர்ப்பை வழங்கிவிட்டார்.

**இது பொலீசார் நடத்திய படுகொலையென்பதை நீதவான் தமது தீர்ப்பில் தெளிவான வார்த்தைகளில் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.**

பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதற்கு முன்னர் கண்ணீர்ப் புகையையோ, குண்டாந்தடியையோ பாவித்ததாக சாட்சியம் எதுவுமில்லையென்பதையும் நீதவான் தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

''குற்றவாளிகளைத் தடுக்கவேண்டிய அமைப்பு இன்று பரிகாசத்திற்குள்ளாகியிருக்கிறது; தர்மம் என்பது ஒரு தொப்பியைப் போன்றது; அதை அணியக் கூடாதவர்கள் எல்லாம் அணிவதால் இன்று அதன் உருவம் சிதைந்துவிட்டது; பொலீசாரும் ஆயுதப் படையினரும் சீசரின் மனைவியைப் போன்று சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கவேண்டும்'' என்றும் தமது தீர்ப்பில் நீதவான் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

''அரசினால் ஏற்படுத்தக்கூடிய ஒரு ஆணைக்குழுவினால் நடத்தப்படக்கூடிய முழுமை பெற்ற விசாரணையில் சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு மரண விசாரணையிலும் பார்க்க கூடுதலான விபரங்கள் வெளிக்கொண்டுவர முடியும்.'' என்றும் நீதவான் தமது தீர்ப்பில் இதுபற்றி ஆராய ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

நீதவானின் இத் தீர்ப்பை அடுத்து அரசாங்கம் இது விடயத்தில் எப்படி நடந்துகொள்ளப்போகிறது என்பதை அனைவரும் இன்று கூர்ந்து கவனித்து வருகின்றனர்; சட்டத்தின் ஆட்சி நிலை நிறுத்தப்படும் — நீதி சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் — என்றெல்லாம் அடிக்கடி கூறி வரும் பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களின் அரசு, கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கும் பொலீசாருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து அவர்களைத் தண்டிக்கப்போகிறதா அல்லது முந்திய அரசு விட்ட அதே தவறுகளைத் தானும் விடப்போகிறதா என்பதே இன்று மக்களின் உள்ளங்களில் கேட்கப்படுகின்ற ஒரே கேள்வியாகும்!

1974 ம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டின் போது பொலீசார் மேற்கொண்ட எதேச்சாதிகார வெறித் தாக்குதலின் காரணமாக ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டபோது, அதுபற்றி விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி கேட்ட நேரத்தில், முந்திய அரசு அதற்கு மறுத்துவிட்டது மட்டுமன்றி இந்த வெறியாட்டத்துக்கு காரணமாக இருந்த பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வும் வழங்கியது. அன்றே விசாரணை நடத்தி குற்றம் புரிந்த, கொடுமையிழைத்த பொலீசார் தண்டிக்கப்பட்டிருந்தால் — பொலீசார் மத்தியில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிலைநாட்டப்பட்டிருக்கும்.

1976 ம் ஆண்டு நல்லூர் செம்மணியில் வங்கி ஊழியர் பரராசா எனும் இளைஞர் பொலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணமானது, பச்சைப் படுகொலையென நீதவான் தீர்ப்பளித்ததுடன், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களான பொலீசாரை விளக்க மறியலில் வைக்கும்படியும் உத்தரவிட்டார். ஆனால் முந்திய அரசாங்கமோ அவர்களை விடுதலை செய்து நீதியை கேலி செய்தது!

இத்தகைய சம்பவங்கள்தாம் பொலீசார் மத்தியில் ஒழுக்கக் குறைவு ஏற்படவும், மக்களை வெறும் பொட்டுப் பூச்சிகளாகக் கருதி அவர்களை சுட்டுத் தள்ளவும் காரணமாக அமைந்தது. பொலீசாரின் இந்தப் பொறுப்பற்ற கொடூரம் நிறைந்த போக்கும், அதற்கு முந்திய அரசு கொடுத்த ஆதரவும்தான் தமிழ் இளைஞர்கள் மத்தியில் விரக்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தி — பொலீசாரை தமது பகைவர்களாகவே கருதும் ஓர் சூழ்நிலையைத் தோற்றுவித்தது; இதை இன்றைய அரசு புரிந்துகொள்ள வேண்டும்!

இன்றைய அரசின் அந்தரங்க சுத்தியையும் நீதியை நிலை நாட்டுவதில் அதற்குரிய நாட்டத்தையும் எடை போடுவதற்கு இப்போது நல்ல சந்தர்ப்பம் ஒன்று தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆம் — யாழ். நீதவான் தீர்ப்பின் அடிப்படையில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பொலீசாருக்கு எதிராக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? ஆணைக்குழு நியமித்து நடைபெற்ற சம்பவங்களை மேலும் ஆராயப்போகிறதா இல்லையா? இதற்கான பதிலை அறிய நாட்டு மக்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்!

# குட்டையை குழப்பும் சீனதாசர்களின் இனத்துரோகம்

அண்மையில் நடைபெற்ற சிங்கள இனவெறி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழூழியர்கள் வெறுங்கையோடும் அவமானத்தோடும் கவலையோடும் தாயகத்துக்கு மீண்டுள்ளனர். அவர்கள் கட்சி வேறுபாடுகளுக்கும், தொழிற்சங்க எல்லைகளுக்கும் அப்பால் சில நியாயமான கோரிக்கைளை முன்வைத்து 'பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகம்' ஒன்றை நிறுவி ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

இத்த ஒற்றுமையைக் குலைப்பதற்கு சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தொழிற்சங்கமும் சதி முயற்சியில் ஈடுபட்டுவருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. பொதுவுடைமை பேசும் அவர்களது ஆதரவாளர்களான சிங்களத் தோழர்களாலேயே நையப் புடைக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கப்பலிலும் புகைவண்டியிலும் தப்பி ஓடிவந்துள்ள இவர்கள் இப்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாது தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வராத சிங்களமக்களுக்காகப் பரிந்து பேசி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

''இடம்பெயர்ந்த ஊழியர் வட்ட வெளியீடு 1'' என்ற தலைப்புடன் வெளியாகியுள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''தத்தம் வேலைத்தலங்களை விட்டு நீங்கி வந்த வைத்திய நிபுணர்கள், தபால் தந்திப் போக்குவரத்துப் பகுதி அதிகாரிகள், ஊழியர்கள், ஆசிரியர்களின் சேவையை அவர்கள் உடனடியாக வேண்டி நிற்கின்றனர்... கலவரத்தில் ஈடுபடாத ஏதுமறியாத அப்பாவி மக்கள் பலரும் கூடத் துன்புறுகின்றனர்''

எம்மவர் எத்தனைபேர் உயிரிழந்தனர். அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த எத்தனை பேர் நிரந்தர பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எத்தனைபேர் சொத்துக்களை இழந்து வாழ்வற்று வருந்துகின்றனர். இவ்வெயெல்லாம் சண்முகதாசன் சீடர்களின் கண்ணில் கண்ணீரை வருவிக்கவில்லை. உடனடித் தீர்வுக்குரியவை என்ற எண்ணத்தை ஏற்படுத்தவில்லை. நேற்றுவரை தமிழன் இங்கு துரத்தப்பட்டால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று கண்ணீர் வடித்தவர்கள் இன்று பேரிழப்பு ஏற்பட்ட நிலையில் தமிழனை மறந்து சிங்களவருக்காகக் கவலைப்படுகின்றனர்.

இடம்பெயர்ந்த ஊழியர் வட்டம் என்பது ஒரு கற்பனை. போலி. இது தமிழரின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ''பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகம்'' அல்ல. பொது மக்களும், பாதிக்கப்பட்ட ஊழியர்களும் இவர்களது அறிக்கைகளைப் பற்றி விழிப்பாக இருக்கவேண்டும். போலி அறிக்கைகளால் ஏமாந்துபோகக் கூடாது.

பலர் இது பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக அறிக்கை என்று எண்ணிக்கொண்டு நிர்வாகிகள்மீது கொதிப்படைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அறிக்கைகளைப் பொறுமையுடன் படித்துத் தெளிவு பெறுவது தமிழரின் கடமையாகும்.

கடந்த ஞாயிறு காலை சிலர் இந்தப் போலி அறிக்கைகளை யாழ். புகையிரத நிலையத்தில் விநியோகித்தபோது ஆத்திரங்கொண்ட சில இளைஞர்கள் அவற்றைக் கிழித்தெறிந்து அவ்வறிக்கையின் போலித் தன்மை பற்றி அங்கு நின்றவர்களுக்கு விளக்கமளித்ததாகத் தெரிகிறது.

'பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகம்' தனது நிலையைப் பத்திரிகை மூலம் தெரிவிப்பதைவிட அறிக்கைகளையும் வெளியிட்டு மக்களின் குழப்பத்தைப் போக்கவேண்டும்.

# தமிழ் ஈழம் அமைப்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டு இனி வேறு வழியில்லையென்ற நிலையில்தான் தமது முடிந்த முடிபாக இன்று தமது மறுக்கொணு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தனித்தேசிய இனமாக சுதந்திரத் தனிநாடு ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அசோக் மேத்தா அவர்களுக்கு அறியத்தருவது நமது கடமையாகும்.

தமிழுக்கு இருந்து வந்த சமஉரிமை 1956 ம் ஆண்டு முதல் மறுக்கப்பட்டு விட்டது. சமஷ்டிக் கோரிக்கை ஏறெடுத்தும் பார்க்கப்படாமல் சிங்களவர்களால் உதாசீனம் செய்யப்பட்டுவிட்டது. இந் நிலையில் இழந்த அரசுரிமையை மீண்டும்நிலைநாட்டத் தமிழ் மக்கள் போராடுவதில் தவறு என்ன என்பதை பெரியவர் அசோக் மேத்தா சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

''இந்தியாவில் எந்த ஒரு தனிநாடு இயக்கத்தையும் தாம் எதிர்ப்பதால், இலங்கையில் அவ்வாறான ஒரு முயற்சியை ஆதரிக்க முடியாது'' என்று அசோக் மேத்தா கூறியிருக்கிறார்.

இந்தியாவின் நிலைமைவேறு; இலங்கையின் நிலைமை வேறு; இந்தியாவிலுள்ள சகல தேசிய இனங்களும் அரசியல் நிர்ணய சபையில் ஒன்றுகூடி — எல்லா தேசிய இனங்களின் இணக்கத்தையும் ஒப்புதலையும், இறைமையையும்கொண்டு உருவாக்கப்பட்டதே இந்திய அரசியலமைப்புச் சட்டம். எனவே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள இந்திய தேசியஇனங்கள் மீண்டும் தனித்தனியே பிரிந்து போவதற்குரிய தமது இறைமையை உரிமையை – இழந்து விட்டன;

ஆனால் — ஈழத்தமிழ் மக்களின் நிலைமையோ வேறு. இலங்கையின் அரசியலமைப்பு, ஈழத் தமிழ்மக்களின் இணக்கத்தையும், சம்மதத்தையும் பெறாமலே 1972ம் ஆண்டு சிங்களமக்களின் பிரதிநிதிகளால் ஒருதலைப்பட்சமாக உருவாக்கப்பட்டது; இலங்கையின் அரசியலமைப்பை உருவாக்கிய அரசியல் நிர்ணய சபையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றவில்லை; தமிழ் மக்களின் இறைமையையும் கொண்டு இலங்கையின் அரசியல் சட்டம் யாக்கப்படவில்லை; எனவே இலங்கையின் அரசியல் சட்டத்தால் தமிழ் மக்களை கட்டுப்படுத்த முடியாது. தங்களுக்கென வேறான அரசியலமைப்பை உருவாக்குவதற்கு உரிமையுடையவர்களாக ஈழத் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

இந்தியத் தமிழ் நாட்டு மக்களுக்கு தனிநாடு கோருவதற்கு சட்டபூர்வமாக உரிமை கிடையாது. ஆனால் ஈழத் தமிழ்மக்களுக்கு அந்த உரிமையுண்டு.

இதை முந்தியஇலங்கை அரசாங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு எதிராகத் தொடர்ந்திருந்த வழக்கில் கூட்டணி சார்பில் வாதாடிய பிரபல சட்ட மேதை அமரர் திரு. மு. திருச்செல்வம் தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தார்.

இந்த அடிப்படை உண்மையை பெரியவர் அசோக் மேத்தா போன்றவர்கள்புரிந்து கொண்டார்களானல் ஈழத் தமிழ் மக்களின் தனிநாடு கோரிக்கையை ஆதரிப்பார்கள் என்பது நிச்சயம்.

## சிங்களச் சகோ...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பாடமாக அமையுமென்று நினைக்கின்றேன். இலங்கையில் பரவலாக நடந்த இனவெறியர்களின் செயல்களுக்கு தமிழ்த் தலைவர்களின் பேச்சே காரணம் என்று கூறும் சில சீமான்களுக்கு இதன்பின் சுத்தமானவுண்மை என்னவென்று விளக்க, இக் கட்டுரையைவிட வேறுவிளக்கம் தேவையில்லை, எனவே இக்கட்டுரையைச் சுதந்திரனுக்கு எழுதி அனுப்பிய அப்பெண் சகோதரிக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் பலவும் சுதந்திரன் மூலமாகவே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்தோடு அப்பெண் சகோதரியைப்போல ஆயிரமாயிரம் பெண்கள் தென்னிலங்கையில் உதயமாகி இனவெறியை முற்ருக எரித்து ஒழித்திட உதவுவார்களென நினைக்கின்றேன்.

க. சைமன் சிங்கோ

புனை

13-9-77

**ஆசிரியருக்குக் கடிதம்**

# சிங்களச் சகோதரியே, உன் சிந்தனைத்தெளிவு வாழ்க!

சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு :-

அய்யா,

சுதந்திரன் 11-9-77 இதழில் சிங்களப் பெண்மணி, திருமதி. எவ்லின் ஜெயசிங்கா எழுதியிருந்த கடிதத்தைப் படித்ததும் என்னுடைய தலை தாழுகவே இறங்கிப் போய்விட்டது : ''வெறியாட்டத்தில் ஈடுபட்ட பெரும்பான்மை இனத்தினைச் சேர்ந்தவராகிய ஒரு பெண்மணி இவ்வளவு தெளிவாக இருக்கின்ற போது, அழிவுக்கும் அவமானங்களுக்கும் உட்படுத்தப்பட்ட தமிழ் இனத்தைச் சேர்ந்த செல்வதி முத்துக்கிருஷ்ணு போன்ற பெண்பிள்ளைகளுக்கு எந்தச் சிறிய பொறுப்புணர்ச்சியும் இல்லையே!'' என்று நினைத்ததே என் தலை இறக்கத்துக்குக் காரணம்.

ஆனாலும், — தொங்கிய முகத்தோடு,—அப்போது என் இதயத்துள்ளே கிளர்ந்த ஒரு சிறிய ஆனந்தத் திணறலோடு, — திருமதி எவ்லின் போன்ற என் சிங்களச் சகோதரிகள் வாழ்கின்ற திசை நோக்கி என் கரங்களைக் குவித்தேன் : நேர்மையே, நிதானமே, பொறுப்புணர்ச்சியே, —நீங்கள் இன்னமும் உலகத்திலே இருக்கிறீர்கள், — மகிழ்ச்சி, மகிழ்ச்சி. !.

''நகும்படி, ஓர் தமிழறிஞன்
தமிழர்க்கு இன்னல்
நாடுவனேல், —அவ்வறிஞன்
முட்டாள் ஆவான்;
இகழ்மிக்க ஒரு முட்டாள்
தமிழர்க்கு இன்னல்
எண்ணுனேல், அம்முட்டாள்
அறிஞன் ஆவான்!''

என்று உணர்ச்சி முழக்கமிட்டான் நமது புரட்சிக் கவிஞன். தமிழர்களின் இன்னுயிர் பறிக்கப்பட்டு அவர்களின் வீடுகளெல்லாம் வெந்தழலுக்கு இரையாக்கப் படுகின்ற வேளையிலும், ''சிறுபான்மையினரான தமிழர் மீதே தவறு'' என்று குற்றப்பட்டியல் போடும் ''தமிழ்ப் புண்ணியவதி'' களை, — புரட்சிக் கவிஞனின் இந்த உணர்ச்சித் தளத்திலே நின்று நான் மதிப்பிடவில்லை; அதற்குச் சரியாக வரவில்லை என்பதால் அவர்களை நான் பழிக்கவும் இல்லை: காரணம், ''தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்யம் இவையுண்டு தானுண்டு என்னும் சின்னதொரு கடுகு போல் உள்ளம் கொண்டோர்'' வரலாற்றிலே எப்போதும் இருந்துதான் வந்திருக்கிறார்கள் !.

என்னதான் அச்சம் நடுக்குவித்தாலும், — என்னதான் தன்னலம் இதயத்தை இருள்வித்தாலும், பத்திரிகைக்குக் கடிதம் எழுதக் கூடிய அளவு படிப்பும், அதை வெளியிடுவித்துக் கொள்ளத்தக்க வாழ்க்கை வாய்ப்பும் உடையவர்கள், — (அவர்கள் தமிழராயினும் மற்றவர்களாயினும்) ,— ஒரு கடுகளவாயினும் சமுதாயப் பொறுப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும்; ''நான் இந்த நேரத்தில் வெளியிடும் இந்தக் கருத்து ஒரு பெருந்தொகையினரான (என்) மக்களுக்கு இன்னலும் இழிவும் ஏற்படாது இருக்க வேண்டும்'' என்கிற முன்னுணர்ச்சியோடு அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். 'குறிப்பிட்ட இந்தத் தமிழ்ப் பெண் அப்படிச் செய்யவில்லையே — அதன் மூலம் தமிழ் இனத்துக்கே இழிவு தேடிவிட்டாரே' என்றே வேதனைப்படுகிறேன்.

இதோ பாருங்கள்: எவ்வளவு தெளிவாக, படிப்பவர் கண்களிலே பெருமிதச் சுடர் விரியும்படியாகக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார் அந்தச் சிங்களச் சகோதரி. ! ''தங்கள் இனத்துக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்க முடியாத தமிழர்களால் சிங்கள மக்களுடன் நிரந்தர சமாதானத்துடன் வாழ முடியாது. (அமைச்சராக இருந்த) குமாரசூரியருக்கு நடந்த கதியைத் தயவு செய்து நினைத்துப் பாருங்கள். குமாரசூரியரைச் சிங்களவராகிய நாங்கள் எங்கள் இதயத்தில் வைத்துப் போற்றுவதாகத் திருமதி செல்வதி கருதுகிறாரா? சிங்கள மக்களிடையே உள்ள கடைந்தெடுத்த இனவெறியர்கள் கூட, தங்கள் இலட்சியத்துக்குரிய விசுவாசத்துடன் உழைக்கும் திரு. செல்வநாயகம் போன்ற தமிழ்த் தலைவர்களையே எப்போதும் மரியாதை செய்வார்கள்.''

'ஏ, தமிழ்ப்பெண்ணே, எவ்வளவு சின்னப்புத்திக்காரியாக இருக்கிறாய் நீ, — உனது பச்சைச் சுயநலம் உனது தகுதிப்பாட்டை எத்தனை ஆழத்தில் குழிதோண்டிப் புதைத்து விட்டது !' என்று முகத்திலே இடித்துச் சொல்லிவிட்டார் இந்தச் சகோதரி. ஆமாம், மனிதக் கூட்டத்திலே கருங்காலிகளாகச் செயற்படுவோரை எல்லோரும் இப்படித்தான் எடுத்தெறிவார்கள்; ''அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா மா'' (நட்டநடுப் போர்க்களத்திலே கீழே தள்ளிவிட்டு ஓடிவிடுகின்ற முட்டாள் குதிரை) போன்ற இனத்துரோகிகளை யாருமே மனிதர்களாக மதிக்க மாட்டார்கள் !

இனப்பற்று என்கிற அளவிலே பார்க்க வேண்டியதில்லை ; — பொதுவாக மனிதத்தரம் என்ற கணக்கிலே பார்த்தாலும், செல்வதி முத்துக்கிருஷ்ணுக்களின் நிலை படு பரிதாபமாகவே இருக்கிறது : பெரிய தேசியச் சிக்கல்கள் ஏற்படும் போது, அவைகளில் கிடைக்கும் அனுபவத்தால் தங்களைத் திருத்தித் திடப்படுத்திக் கொள்கிறவர்களே, தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தோருக்கும் பெருமை தேடிக் கொள்ளுகிறார்கள் ; அந்த அனுபவங்களால் உலைந்து குலைந்து அல்லோலகல்லோலமாகி, தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்கிறவர்கள், தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இகழ்ச்சியையே திரட்டிக் கொள்ளுகிறார்கள்,

''தமிழ்மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்படுத்தப்பட்ட பயங்கரமான சேதங்களையும் தமிழ் யுவதிகள் ஏராளமானோர் கற்பழிக்கப்பட்டதையும் நேரடியாகக் கண்ட பின்னர், இந்த நாட்டின் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் கவுரவமாகவும் வாழக்கூடிய இடங்களை நாடிச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை உணருகிறேன்; பிரதமரும் பிரேமதாசாவும் எவ்வளவுதான் அந்தரங்க சுத்தியாகத் தமிழ்மக்களுக்கு உதவ முன்வந்தாலும், காலத்துக்குக் காலம் தென்னிலங்கையில் எழும் இனவெறிக் கொடுமையிலிருந்து தமிழ்மக்களை அவர்களால் காப்பாற்றிவிட முடியாது!''— முழுமையான இதய சுத்தியும் நிதானத் தெளிவும் நிறைந்த கணிப்பு இது,

திருமதி எவ்லின் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு, அரசியல் கோணல்களுக்கும் தன்னலச் சுமைதாங்கிகளுக்கும் பிடிக்காமல், அல்லது பிடிபடாமல் இருக்கலாம் ; ஆனுல், இலங்கை நாட்டைப் பொறுத்தவரை, இதுதான் உண்மை; இந்த உண்மையின் மீதுதான் இலங்கையின் எதிர்கால வரலாறு அமையப் போகிறது !

— முனைவர்
சாலை இளந்திரையன்

புதுடெல்லி
15-9-77

* *

திருமதி எவ்லின் ஜெயசிங்கா அவர்கட்கு—

11-9-77 சுதந்திரனில் வெளியிடப்பட்டிருந்த உங்கள் கட்டுரைக்காக எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனுல் உங்களைப் போன்ற சிங்களமக்களை நாம் சந்திக்காதது எமக்குப் பெரிய துக்கம்தான். நீங்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கிறீர்கள். சிங்களவர் பெரும்பான்மையானோர் (தொண்ணூறு வீதம்) வகுப்புவாத மனம் கொண்டவர்கள் என்பதே எனது கருத்து. உதாரணமாக— வண மடிகேபன்ன சிகதேரோ போன்றோர்காணப் படுகிறார்கள். அதன் காரணமாக இலங்கையில் சமாதானம் நிலவ முடியவில்லை.

நான் இந்திய வம்சாவளியில் வந்த தமிழன். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தனிநாடு கொள்கையை இதுநாள் வரை எதிர்த்து வந்தவன். எனினும் அண்மையில் நடந்த இனக்கலவரத்தின்போது கூட்டணியுடன் [illegible] பங்கேற்காத இந்தியவம்சாவழித் தமிழர்கள்தாம் மிகவும் மோசமானநிலையில்கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த மக்களுக்கு யாழ்ப்பாணம் எப்படியிருக்குமென்று கூடத் தெரியாது. இப்போது எமக்கு தமிழர் கூட்டணியை ஆதரிப்பது தவிர வேறு வழியில்லை; ஏனெனில் நாங்கள் வாழுவதற்கு எமக்கென்று ஓர் இடம் தேவை. சிங்கள மக்களுடன் இனிசேர்ந்து பாதுகாப்புடன் வாழமுடியாது. இந்த நாட்டை இன்றைய படுபாதகமான நிலைக்கு கொண்டு வந்த சிங்கள அரசாங்கங்களின் முட்டாள் தனமான பொருளாதாரக் கொள்கைகளுக்கு நாம் பலிக்கடாக்கள் ஆகமுடியாது, தமிழ் மக்கள் பற்றிய தங்கள் உளப்போக்கை சிங்களவர்கள் மாற்றிக்கொண்டாலன்றி—தனித் தமிழ்நாடு உருவாகுவது தவிர்க்க முடியாதது.

எஸ். ஜெகநாதன்
23, காரன் பிளேஸ்
நீர்கொழும்பு,
12-9-77

* *

அன்பின் சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு;

தங்களின் பத்திரிகையில் பிரசுரித்த கண்டியைச் சேர்ந்த சிங்களப் பெண்மணியின் பதில் கட்டுரையை வாசித்தேன். இன்று இனவெறியுடன் திரியும் சிங்களவர்கட்கும், ஆங்கிலமோகங்கொண்ட தமிழர்களுக்கும், அது ஒரு சிறந்த

(4ம் பக்கம் பார்க்க)

## எமது வழக்கு

''போராட நீங்கள் விரும்பினுல்— போராட்டம் நிகழட்டும்; சமாதானமாயின் சமாதானம் நிலவட்டும்'' என்று சிறிலங்கா மக்கள் கூறுவதாக பிரதமர் இச்சபையிலே கூறினுர். தமிழ் மக்கள் சார்பிலே நான் இதற்குப் பதிலளிக்க விரும்புகிறேன்—

நாம் சாதாரணமாகவே அமைதியையும் சமாதானத்தையும் விரும்புகின்ற மக்கள்; ஆனுல் எந்த விலை கொடுத்தும் அந்த சமாதானத்தை நாம் நாடமுடியாது. நாம் விரும்புவது எமது சுயமரியாதையைப் பறிகொடுக்கின்ற சமாதானம் அல்ல; இச்சபைக்கு வெளியே நிகழும் காடைத்தனத்தினுல் நாம் இங்கு பயத்தினுல் தலை குனிந்துநின்று பேசுகிறோம் என்று எவரும் நினைத்துவிட வேண்டாம்; எங்கள் உயிருக்கே பயமுறுத்தல்கள் விடப்படுகின்றன. நாம் ஏதோ பாதுகாப்பாக இருப்பதாக பிரதமர் அவர்கள் இச்சபையில் கூறினுர். நாங்கள் தாக்கப்பட்டோம்;நொறுக்கப்பட்டோம்; மூன்று நாட்களுக்கு முன்னர் நல்லூர்த் தொகுதி உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் வீட்டுக்குள் யாரோ ஒருவர் பதுங்கியிருந்திருக்கிறார். அப்படிப் பதுங்கியிருந்தவர் தம்மைக் கொல்லவே அங்கு வந்ததாக திரு. சிவசிதம்பரம் பொலீசாருக்கு கூறியிருக்கிறார்.

இவையனைத்தையும்பற்றி நாம் அக்கறை கொள்ளவில்லை; ஆனுல் சுயமரியாதையும் கௌரவமும் சுதந்திரமும் உள்ள மக்களாக நாம் பல நூற்றுண்டுகாலமாக வாழ்ந்திருக்கிறோம் என்று கூறுகிறோம். எமது சுயமரியாதை சிதைவு பெறுமலும் எமது கௌரவம் ஏளனப்படுத்தப்படாமலும் நாம் சுதந்திர மனிதர்களாக தொடர்ந்து வாழ விரும்புகிறோம். நாம் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்ற காரணத்துக்காக எமது உயிர் எந்தப் பெறுமதியுமற்றது என்று எவரையும் நாம் நினைக்கவிட விரும்பவில்லை— எமது உயிர் அபகரிக்கப்படலாம். தமிழர் என்ற காரணத்தினுல் இன்று உச்சநிலையிலிருக்கும் எந்த ஒரு தமிழ் அதிகாரியும் தனது கட்டளைகளை செயற்படுத்த முடியாதிருக்கின்றார். இன்று நிலவுகின்றநிலைமை இதுதான்!

சிங்கள சகோதரர்களுடன் சமபங்காளிகளாக ஒன்றுபட்ட இலங்கையில் வாழ நாம் எம்மால் இயன்ற அனைத்தையும் முயன்று பார்த்து விட்டோம்— எமது முயற்சிகள் அனைத்தும் புறக்கணிக்கப் பட்டுவிட்டன; தோல்வியடைந்துவிட்டன!

நாம் இணக்கப் பேச்சுக்கள் நடத்தத் தயாரில்லை என்பதல்ல இதன் பொருள். ஆனுல் சமாதானத் தீர்வு ஒன்றை நாம் காணமுடியாவிட்டால் — சுயமரியாதையுள்ள மக்கள் என்ற முறையில், இத்தீவில் இரண்டாந்தர அந்தஸ்தையும் அடிமை வாழ்வையும் ஏற்று அதற்கு நாம் தலைகுனிந்து வாழ வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

சபாநாயகர் அவர்களே, இவ்வாறு அடிமை வாழ்வை ஏற்றுக்கொள்ளும்படி நீங்கள் ஆலோசனை கூற மாட்டீர்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன்— வேறு எவரும் எமக்கு இந்தப் புத்திமதியை கூறுவார்கள் என்றும் நான் நம்பவில்லை! இதுதான் எமது வழக்கு!

—நாவலர்
அ. அமிர்தலிங்கம்

—(23-8-77 தேசியஅரசுப் பேரவையில் அரசின் கொள்கை விளக்க கூற்று விவாதத்தின் இறுதியில் நிகழ்த்திய உரையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திக்குத்து, பொல்லடி, கொள்ளை

## கொழும்பில் தமிழருக்கு நடந்தகொடுமைகள்

சிங்களவர்களின் இனவெறிக் கொடுமையின்போது கொழும்பில் தமிழர்கள் பாதிப்புக்கு ஆளான சில சம்பவங்களையிட்டு பொலீசார் உத்தியோக பூர்வமான அறிக்கையொன்றை கொழும்பு பிரதம நீதவான் திரு. ரணராஜா முன்னிலையில் தாக்கல் செய்துள்ளனர். அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள விபரங்கள் வருமாறு:—

✻ ஊர்காவற்றுறை காரைநகர் பாலக்காடு, பகுதியைச் சேர்ந்தவர் சங்கரப்பிள்ளை நமசிவாயம். இவர் குருநாகலையில் இருந்தபோது அங்கு ஏற்பட்ட கலவரங்களிலிருந்து தப்பி புறக்கோட்டை பஸ்நிலையம் வந்து சேர்ந்துள்ளார். அங்கு இருபது பேர் வரை சூழ்ந்து இவரைத் தாக்கியதுடன் இவரின் சூட்கேசையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இதில் இவரின் 10 ஆயிரம் ரூபா பணமும் இருந்துள்ளது.

✻ புசல்லாவையில் இருந்து புறக்கோட்டை பஸ்நிலையத்தில் வந்திறங்கிய மரியபிள்ளை செல்லமுத்துப் பிள்ளையை ஐம்பது பேர்வரை கடுமையாகத் தாக்கியுள்ளனர். அடுத்து இவரிடம் இருந்த 1290 ரூபா பணமும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

✻ புறக்கோட்டை டயஸ் பிளேஸைச் சேர்ந்த இராமசாமிப்பிள்ளை வெங்கடாசலம் வாழைத்தோட்டப் பகுதியால், நடந்து வந்துள்ளார். அப்போது யாரோ ஒருவர் அவரது தலையை கல்லால் தாக்கியுள்ளார். அடுத்து இன்னுமொருவர் ஓடிவந்து அவரது தொடையில் கத்தியால் குத்தியுள்ளார்.

✻ பெரியண்ணப்பிள்ளை அருணாசலம் என்பவர் மரக்கறி வாங்க புறக்கோட்டை மரக்கறி மார்க்கட்டுக்கு வந்துள்ளார். அப்போது இருபது பேர் அளவில் வந்து இவரைச் சூழ்ந்து கத்தியால் குத்தியும் பொல்லால் தாக்கியும் காயப் படுத்தியுள்ளனர். அச்சமயம் அவ்வழியாக வந்த பொலீசார் இவரைக் காப்பாற்றியுள்ளனர்.

✻ யாழ்ப்பாணம் கனகரத்தினம் வீதியைச் சேர்ந்தவர் ராஜகோபாலபிள்ளை செல்வரத்தினம். இவர் புதுச் செட்டித் தெருவில் ஒரு கடை வைத்திருக்கின்றார். இவர் மரக்கறி வாங்க வந்தபோது 'நீ யாழ்ப்பாணத்தானா?' என்று ஒருவர் கேட்டுள்ளார். 'இல்லை மாத்தளை' என்று இவர் பயத்தில் பதிலளிக்கையில் பலர் இவரைத் தாக்கிக் கத்தியாலும் குத்தியுள்ளனர்.

✻ புறக்கோட்டையில் கலவரம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது விவேகானந்தா வீதியைச் சேர்ந்த மொகிதீன் அடுமை என்பவர் தமது காரை மெதுவாக செலுத்திக் கொண்டு போயுள்ளார். அப்போது 'நீ யாழ்ப்பாணமா?' என்று ஒருவர் வந்து இவரிடம் கேட்டுள்ளார். இவர் 'இல்லை' என்றுபதில்கூறுவதற்கிடையில் சவரக்கத்தியினால் அந்த நபர் இவரின் முகத்தை வெட்டி விட்டுப் பாய்ந்தோடி விட்டான்.

✻ டாம் வீதியைச் சேர்ந்த ராமசாமி ஆறுமுகம் கடையை மூடிவிட்டு வெளியில் வந்து நிற்கையில், ஐந்துபேர் அங்கு வந்து இந்தக் கடையை இரவில் உடைக்கவேண்டும் என்று கூறியுள்ளார்கள். உடன் இவர் தமது முதலாளிக்குச் சொல்ல ஓடுகையில், இவரை அவர்கள் பொல்லால் தாக்கிக் கத்தியால் குத்தியுள்ளார்கள்.

✻ கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சின்னப்பன் மாதவன் புறக்கோட்டை மார்க்கட்டுக்குச் சென்றபோது பலர் வந்து தாக்கியதுடன் இவரைக் கத்தியாலும் குத்தியுள்ளனர்.

✻ ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த சங்கண்ணன் நாகராஜா மரக்கறி வாங்கப் போனபோது, கச்சேரி வீதியில் வைத்து 'இன்னும் மரக்கறி வாங்கவா வாறிங்க?' என்று சிங்கள மொழியில்கேட்டு ஆறு பேர் இவரைத் தாக்கியதுடன் கத்தியாலும் குத்தியுள்ளனர்.

✻ அலுத்மாவத்தையைச் சேர்ந்த தேவசகாயம் சாமி என்பவர் மீன்சந்தைக்குச் சென்றபோது பின்னால் வந்து ஒரு நபர் அவரின் முதுகில் சவரக் கத்தியினால் வெட்டியுள்ளார்.

✻ விவேகானந்தா வீதியைச் சேர்ந்த சிவசாமி ராஜன் என்பவர் கலவரத்திற்குப் பயந்து 6205 ரூபா பெறுமதியான உடுப்புப் பெட்டியுடன் பாய்ந்தோட முயற்சிக்கையில் அவரது வீட்டினுள் வந்த கொள்ளைக்காரர்கள் இவற்றைப் பறித்துக்கொண்டு ஓடியுள்ளனர்.

✻ கொழும்பு கச்சேரி வீதியைச் சேர்ந்த "உமா டிரேடர்ஸ்" என்ற சில்லறைக் கடை கலகக்காரர்களால் எரிக்கப்பட்டுள்ளது. இதனால் 17,373 ரூபா பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் சின்னத்துரை சிவபாலன் புகார் செய்துள்ளார்.

✻ கச்சேரி வீதியைச் சேர்ந்த கே. நித்தியானந்தன் என்பவர் தமது கடையைப் பூட்டிவிட்டுச் சென்று திரும்பி வந்து பார்க்கையில் கடை தீ வைத்து எரிக்கப்பட்டிருந்தது. இதனால் அவருக்கு 5169 ரூபா 25 சதம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

✻ சின்னத்துரை திருநாவுக்கரசுவுக்கு சொந்தமான காஸ்வீதியைச்சேர்ந்த 'மாலா ஸ்டோர்' என்ற சில்லறைக் கடையை அவர் பூட்டிவிட்டுச் சென்றிருந்த வேளையில், அக் கடை தீவைத்துக் கொளுத்தப் பட்டுள்ளது. இதனால்அவருக்கு 12, 190 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

✻ 5ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த நாகராஜா பத்மநாதன் என்பவர் தமது வீட்டைப் பூட்டிவிட்டுச் சென்றிருந்த வேளையில் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. இதனால் 1600 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

✻ சொக்கலிங்கம் சங்கரதாஸ் என்பவர் செட்டியார் தெரு கோயிலடியில் வரும் போது ஐந்துபேர் அவரை மறித்து அவரின் கையிலிருந்த பணம் உட்பட 315 ரூபாபெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

## தமிழ் மக்களை ஆளுவ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க மறுக்கின்றபடியால்— இங்கும் ஒரு தமிழ்நாடு உதயமாகும்"

இதுவே அமரர் ஜீ. ஜீ. கூறிச்சென்ற இறுதி வாசகங்களாகும். இதுபோலவே மற்றோர் தமிழ்க் கட்சியின் தலைவராக விளங்கிய அமரர் செல்வநாயகம் அவர்களும் இரண்டு சிங்களக்கட்சியின் தலைவர்களுடனும் — இரண்டு சிங்கள அரசுகளுடனும் இரு தடவை ஒப்பந்தம் செய்து பார்த்தார். இரண்டு ஒப்பந்தங்களும் கிழித்து வீசப்பட்டுவிட்டன. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு சிங்களக்கட்சிகள் இரண்டும் தமிழர் பிரச்சினையை பகடைக்காயாக்கி விளையாடி வந்திருக்கின்றன. இந்த நிலையில் நாம் ஓர் உறுதியான, மாற்றமுடியாத இறுதி முடிவுக்கு வந்துவிட்டோம்.

**எங்கள் சொந்த அரசை, எங்கள் சொந்த நாட்டில் நிறுவி, எங்களை நாங்களே ஆள்வது என்ற மாற்றமுடியாத முடிவுக்கு நாங்கள் வந்துவிட்டோம்!**

கௌரவ பிரதமர் சத்தியாக்கிரகத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கையுள்ளவர். அதே போல நாமும் அஹிம்சையையும், சட்ட மறுப்பையுமே எமது பாதைகளாக ஏற்றிருக்கிறோம். எங்கள் தியாகத்தினால், உங்கள் இதயத்தை மாற்ற முடியும் என்று நாம் எதிர் பார்க்கிறோம், எங்கள் தமிழ் மக்கள் எமக்கு தந்திருக்கும் கட்டளையை நிறைவேற்ற நாம் எந்த இயக்கத்தை ஆரம்பித்தாலும், அதை நசுக்கவும், எங்கள் மக்களை கொடுமைப் படுத்தவும் நீங்கள் முயற்சிக்கலாம்; அடக்கு முறைகளை ஏவி விடலாம் — அப்படி நீங்கள் செய்வீர்களானால், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது— உப்புச்சத்தியாக்கிரக நேரத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு மகாத்மா காந்தியடிகள் கூறியபதிலையே இங்கு கூறி எனது உரையை முடிக்க விரும்புகிறேன்.

பிரிட்டிஷ் அரசு தனது இரும்புக் கரத்தினால் உப்பு சத்தியாக்கிரகத்தை முறியடிக்கும் என்று கூறப்பட்டபோது மகாத்மா காந்தியடிகள் கூறியது இதுதான்—

"அஹிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் எனது கைப்பிடிக்குள் அடங்கியிருக்கும் இந்த உப்பு இந்தியாவின் சுயமரியாதைக்கு உதாரணமாக விளங்குகிறது. உப்பை அள்ளியிருக்கும் கைகளை வேண்டுமானால் அடித்து முறிக்கலாம்- ஆனால் அப்படி முறிக்கப் படும் கைக்குள்ளிருந்து உப்பு மட்டும் கடைசி வரை கீழே விழாது!"

மகாத்மா காந்தியின் இந்த மேற்கோளுடன் எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

## பேரவை நிதி திரட்டுகிறது

பாடசாலை மாணவர்களுக்கிடையே ஒரு ரூபா பெறுமதியான பற்றுச்சீட்டை விநியோகித்து தமிழ் மாணவ அகதிகளுக்கு மறுவாழ்வு நிதி சேகரிப்பதென்று நல்லூர் தமிழ் மாணவர் பேரவை முடிவு செய்துள்ளது. இந்நிதி திரட்டும் குழுவுக்குப் பொறுப்பாக பேரவையின் காப்பாளர்களில் ஒருவரான வண. சர்வானந்தா அடிகளாரும், பேரவைத்தலைவர் என். ரி. ஜெகனும், பொருளாளர் என். தவபாலனும், செல்வி சாந்தினி, செல்வன் பரிமளராசா, பிறேமகுமார் ஆகியோரும் பணியாற்றுகிறார்கள்.

திரட்டப்படும் பணம் தமிழர் விடுதலைக் கூட்டணி செய [illegible]

## தமிழ் அகதிகள் கூறும்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு நின்றுவிடாமல் இவரது இருபத்தொரு வயதான மகன் பூபாலசிங்கமும், பலாலியைச் சேர்ந்த இவரது லொறிச் சாரதியான (எட்டுப் பிள்ளைகளுக்கு தந்தை) சிவஞானம் என்பவரும் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதுமட்டுமல்ல, இவர்களின் லொறியோடு சேர்ந்து வந்த புத்தூர் இராமநாதன் (கோபால்) என்னும் இவருடைய மைத்துனருடைய லொறியும் அதே இடத்தில் தீக்கிரையாக்கப்பட்டுவிட்டது. அவர்களின் லொறி கிளீனரின் தோலை பிசுங்கான் துண்டுகளால் கிழித்து தமிழ் இரத்தமா முதுகில் ஓடுகிறது என இரத்தத்தை ஏந்தி கையில் வைத்துப் பார்த்து எள்ளி நகையாடினார்களாம் சிங்கள இன கொடுங்கோலர்கள் !

✻

ஆலங்கேணியைச் சேர்ந்த ஆனந்தசிவம் எழுதுவதாவது:-

25-8-77 மாலை 5 மணியளவில் எங்கள் வீதியால் தம்பலகாமம், கந்தளாய், பன்குளம் முதலிய இடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக எங்கோ சென்று கொண்டிருந்தனர். அவர்களை அணுகி நானும் என் நண்பர்களும் எங்கிருந்து வருகிறீர்கள் என கேட்ட போது பெண்கள் அழுதவண்ணம், தங்களுக்கு சிங்கள இன வெறியர்கள் செய்த கொடுமைகளைக் கூறத் தொடங்கினர். பன்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு இளம் பெண் தான் பட்ட கஷ்டங்களை கூறத் தொடங்கினாள். 21-8-77 அன்று இரவு திடீரென எங்கள் வீட்டிற்குள் சிங்கள இன வெறியர்கள் பிரவேசித்தனர். வீட்டில் இருந்த பொருட்களை கொள்ளை அடித்தனர். என்னைக் கண்ட மூவர் என்னை துரத்தத் தொடங்கினர். நான் என் செய்வேன் என் பாவாடையை உயர்த்திப் பிடித்த வண்ணம் காட்டை நோக்கி ஓடினேன். அவர்களும்விடாது துரத்தி வந்தனர். கடைசியில் ஒரு காட்டிற்குள் சென்று மறைந்துவிட்டேன். இப்படியே எந்தவித சாப்பாடும் இல்லாமல் மூன்று நாட்கள் காட்டிற்குள் இருந்து இங்கே வந்தோம் என்றாள். என்கண்களால் கண்ணீர் துளிகள் சிதறி விழுந்தன.

அதே வேளை எங்கள் ஊரை சேர்ந்த ஓர் இளம் பாலகன் சிங்கள காடையர்களால் வெட்டப்பட்ட நிலையில் வண்டியில்கொண்டுவரப்பட்டான். வேளாண்மை வெட்டச்சென்ற வானாறு என்னும் இடத்தில் வைத்து அவன் வெட்டப்பட்டிருக்கிறான். என்ன கொடுமை ... தோட்டம்காக்கப் போட்ட வேலியே பயிரை மேய்வதா?

"சரஸ்வதி படம்"
"நவராத்திரியும் தேவி வழிபாடும்"
50 மில்க்வைற் நீலசோப் அல்லது
10 பார் சோப் அல்லது
10 நீம் வாசனை சோப்
மேலுறைகளை அனுப்பி மேற்படி அழகிய படத்தையும், புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
விநியோகப் பகுதி,
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண் 77
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கந்தளாயில் கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்கள இன வெறிச் சம்பவங்கள் பற்றி 'கதிரோன்' எழுதுவதாவது:-

ஐக்கியம், தேசியம் பேசுகின்ற தற்போதைய ஆட்சியாளரின் மூலகர்த்தாவான டி. எஸ். சேனநாயக்கா காலத்தில் காடுகளை அழித்து களனிகளாக்கும் திட்டத்தில் இப்பகுதியில் குடியேற்றப்பட்ட தமிழ் மக்கள் இன்று பயங்கர கொடுமைகளுக்கு மத்தியில், காலத்தைக் கழிக்கின்றனர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வசித்துவந்த தமிழ் மக்கள் இன்று அப்பகுதியில் குடியமர அஞ்சி வேறு புகலிடம் தேடுகின்றனர். நடந்தது இதுதான்.

23-8-77ம் திகதி நள்ளிரவு சிங்கள இனவெறிக் காடையர்களால் குடியேற்றப்பகுதியில் உள்ள ஒன்பது தமிழ் வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டதுடன், மூன்று தமிழ் உயிர்கள் அநியாயமாக கொல்லப்பட்டன; கொன்றதுடன் நில்லாது கந்தசாமி என்ற இளைஞனின் உடலுறுப்புகூட வெட்டியெடுக்கப்பட்டது. இந்த இனவெறியர்களுக்கு அவ்வளவு கொடூரமான உணர்வுகளா? என்று ஒரு சிங்கள அன்பரே தன்வாயால் கூறுமளவுக்கு இப்பயங்கர காரியம் நடந்துள்ளது. ஐந்து வயது பாலகனை, மலரவேண்டிய — வாழவேண்டிய இளம்பிஞ்சை கத்தியால்குத்தி கொலை செய்து விட்டு, எரிகின்ற வீட்டில் தூக்கிப் போட்டு கொள்ளியும் வைத்தனர்.

கந்தளாய் பட்டினத்தில் ஒரேஒரு தமிழ்க்கடை, அந்தத் தமிழ்க்கடையும் கொள்ளையடிக்கப்பட்டது. தமிழ் விவசாயி ஒருவரின் உழவு இயந்திரம் காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. தமிழர் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டது. சேமலாப நிதி எடுப்பதற்காக திருமலை செல்வதற்காக பஸ்ஸில் சென்ற அம்பலவாணர் என்ற தமிழ் முதியவரின் உயிர் பஸ்ஸில் வைத்தே காடையர்களால் பறிக்கப்பட்டது. இளைஞர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். இவர்களில் ''சிங்கர்'' என அழைக்கப்படும் அன்பர் குறிப்பிடத் தக்கவர்.

''கந்தளாய் மயக்குதே'' என வர்ணிக்கப்பட்ட சீனி ஆலையில் நடந்த கொடூரங்கள் சொல்லும் தரமன்று. குணராஜா என்ற பொறியியலாளர் வெட்டிக் கொலை செய்யப்பட்டதுடன் அவருடைய காரும் தீக்கிரையாக்கப்பட்டது. அவர் மனைவி கர்ப்பிணியான பெண், அவரைக் கூட காடையர்கள் விட்டு வைக்கவில்லை. இத்தனையும் நடந்த காட்சிகளை நேரில் கண்ட இப்பெண் தற்பொழுது சித்த சுவாதீனமற்ற நிலையில் இருக்கின்றார். இன்னும் கரும்புத் தோட்டங்களுக்கூடாக ஓடிய அநேக தமிழ் உத்தியோகத்தர்கள் அடி உதை வாங்கிய நிலையில் உயிர் தப்பிப் பிழைத்தனர். இவர்கள் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன.

தமிழ் ஈழத்தின் எல்லைப்புறம் காக்கப்பட வேண்டும். அப்போதுதான் திருமலையும் தப்பும். இன்றேல் தனிநாடு கோரிக்கை செத்து மடிய வேண்டிய ஒன்றே, குளக்கோட்ட மன்னன் ஆண்ட பூமியை, நாம் கட்டிக் காத்து சேர்ப்போம் தமிழ் ஈழத்தில்!

✻

அனுராதபுரத்தில் பல ஆண்டுகளாக கடை வைத்திருந்தவரும், சுதந்திரன் பத்திரிகைக்கு 1947ம் ஆண்டிலிருந்தே அனுராதபுர விற்பனையாளராக இருந்து வந்தவருமான திரு. பி. தியாகராசன் எழுதுவதாவது:-

17-8-77 காலை சிங்களக் கொள்ளையர்களினால் எமது கடை அடித்து நொருக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. அச்சமயம் நானும் கடையில் உள்ள ஏனைய தமிழ் ஊழியரும் பக்கத்துக் கடைக்காரருமாக எண்மர் கொள்ளையர்களிடம் சிக்கிக்கொண்டபோதிலும் — ஆறு பேர் தந்திரமாக ஒரு மாதிரி வெளியே வந்து விட்டோம். எமது கடையில் வேலை செய்தவர்களில் இருவரை அடித்து எமது கடைக்குள்ளிருந்த கிணற்றுக்குள் போட்டுவிட்டு அவர்களுக்கு மேல், அங்கு கிடந்த உரல், உலக்கை, ஐந்து அந்தர் தராசு, வெற்றுச்சாக்கு, சுருட்டுப் பெட்டி போன்றவற்றைப் போட்டு நிரப்பிவிட்டார்கள்; தெய்வாதீனமாக கொள்ளையர்கள் அங்கிருந்து போன பின்னர், கிணற்றுக்குள் அடித்துப் போடப்பட்டவர்கள் உயிர் பிழைத்து வெளியேறி வந்தனர் என்று பின்னர் அறிந்து ஆறுதலடைந்தோம். எமக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா ஒரு லட்சத்துக்கு மேல் இருக்கும். நானும் பங்காளிகளும் மேற்கொண்டு என்ன செய்வது என்று அறியாமல் அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடாத நிலையில் இருக்கிறோம்.

✻

இரத்மலானையிலிருந்து தாயகம் திரும்பியுள்ள கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த அருமைத்துரை எழுதுகிறார்:-

ஆகஸ்ட் மாதம் 19ம் திகதி எனது மாமனாரும் மச்சானும் இரத்மலானையில் உள்ள அவர்களது வீட்டில் சிங்களப் படுபாதகர்களால் படுகொலை செய்யப்பட்டார்கள். இதை அறிந்து எனது உறவினர்களின் சடலங்களைப் பொறுப்பேற்க களுபோவிலை ஆஸ்பத்திரிக்குச் சென்ற இடத்தில் ஆஸ்பத்திரிக்குள்ளேயே வைத்து கிட்டத்தட்ட 20 பேரினால் நானும் மாமனாரின் கடையில் வேலை செய்யும் வேலைகாரப் பையனும் மிகக் கடூரமாகத் தாக்கப்பட்டோம். அடியின் அகோரத்தினால் வேலைகாரப் பையனுக்கு சிறுநீரும் போய்க் கொண்டேயிருந்தது. எங்களை ஏற்றிக்கொண்டு போய் மோசம் செய்வதற்கு டாக்சியும் ஆயத்தமாக வைத்துக்கொண்டு நின்றார்கள். இறுதியில் ஒரு விதமாக ஆஸ்பத்திரி போஸ்ட் பொலீசுக்குள் சரணடைந்தோம். அபயமளிக்க வேண்டிய பொலீசார் அங்கு எம்மை தாக்கவந்தார்கள், எனக்கு தெரிந்த ஓர் அன்பரின் கார் அவ்விடத்துக்கு வந்தபடியால் தெய்வாதீனமாய் உயிர்தப்பி இரத்மலானை சென்றடைந்தோம். இரத்மலானையில் நிலைமை மிக மிக மோசமடையவே எனது சொந்தக் கடையையும் விட்டு விட்டு எனது மனைவி பிள்ளைகளை காப்பாற்றும் நோக்கத்தோடு ஒவ்வொரு இடமாக மாறி மாறி இறுதியில் சென்ற். பீற்றர்ஸ் முகாமையடைந்தோம். அவ்விடம் இருந்து எனது கடை தீ வைக்கப்பட்டு சாமான்களும் கொள்ளையடிக்கப்பட்ட சேதியை அறிந்து கொண்டேன். 25ந் திகதி விமானத்தில் ஏறுமட்டும் உயிரோடு எமது சொந்த தாயகம் செல்வோமென்ற நம்பிக்கை எமக்கில்லை. நாய்க்கு நடவாத நடப்பு எமக்கு சிங்களப் பகுதியில் நடந்தது. அவ்விடமிருந்து எவ்வளவுதான் உழைத்தாலும் நிம்மதியில்லாத வாழ்வு. எமக்கு வாழ்வளிக்கக் கூடியது எமது தாயகம்தான். தனிநாடுதான் எமது வழி.

படுகொலை செய்யப்பட்ட எமது உறவினரைப் பார்த்து அவர்களது சடலங்களை பொறுப்பேற்கக்கூட எமக்கு உரிமை இல்லை. இப்படிப்பட்ட அடிமை வாழ்வு எமக்கு தேவைதானா?

✻

அச்சுவேலியைச்சேர்ந்த லொறிச் செந்தக்காரர் நா. சின்னத்தம்பிக்கும், அவரது குடும்பத்துக்கும் நடந்த பயங்கரச் சம்பவம் வருமாறு :-

திரு. சின்னத்தம்பிக்கு சொந்தமான இரண்டு இலட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான இசூஸ் பென்ஸ் லொறி கெக்கிராவையிலுள்ள பி. எஸ், சுப்பிரமணியத்தின் மில்லினுள் வைத்து கடை, மில்லோடு எரிக்கப்பட்டது.

(6ம் பக்கம் பார்க்க)

# எழுந்து வா நெருப்புத் தாயே!

—புதுவை — இரத்தினதுரை —

இருமொழி ஒருநா டென்று
இதுவரை இருந்த நீதி
தெருவினிற் கிடக்கு தம்மா.
தேசியம் என்ற பிள்ளை
கருவிலே சிதைந்த காட்சி
கண்களிற் தெரியு தம்மா.
பெருத்ததோர் வகுப்பு வாதப்
புயலடித் தோய்ந்த தம்மா.

✻

விரிந்தமா கடலே! பொங்கி
விழுங்குவாய் இலங்கை நாட்டை.
எரிந்து நீறுகும் வண்ணம்
எழுந்துவா நெருப்புத் தாயே!
சரிந்தது இங்கே கொற்றம்.
''சண்டியர்'' கூட்டம் மட்டும்
திரிந்துதீ யிட்டார், அந்தத்
தீயிலே...... தமிழர் செத்தார்.

✻

தாய்முலைப் பாலே யுண்ணும்
தளிர்களும் எரிந்த தம்மா.
பாயிலே....... நோயாற் சாய்ந்து
பரிதவித் திட்டோர் கூடத்
தீயினல் வெந்தா ரம்மா.
தீவெலாம் எரிந்த காட்சி
வாயினுற் சொல்லப் பத்து
வருடமும் போதா தம்மா.

✻

கண்டியிற் தீயை வைத்தார்.
காலியில் உடலைச் சுட்டார்.
வண்டிகள் மறித்து மன்னர்
வழியிலே...... கற்பைத் தின்றார்.
கன்றுகள் தன்னைத் தாயின்
கண்களின் முன்னே விட்டே
என்னவோ ஏதோ செய்தார்
எதைவிட, எதனைச் சொல்ல.

✻

பூட்டிய அறைக்குள்......, நாணம்
பூசிய நிலையில், தன்னை
மீட்டிடும் கணவன் மட்டும்
மிதந்திடும் ஓடை தன்னில்
ஆட்டை வெம் புலிகள் தின்னும்
ஆய்க்கினை நிலையில் நூறு
சேட்டைகள் செய்தார்; அந்தோ
செத்தவர் தமிழர் பெண்கள்.

✻

சட்டத்தை காப்போ மென்று
சத்தியம் எடுத்த, காக்கிச்
சட்டைகள் தொடக்கி வைத்தார்.
சாதுசா தென்றே யோதும்
மொட்டைகள் ஒத்துப் பாடி
மீதியை முடித்து வைத்தார்
திட்டங்கள் போட்டோர் வென்றார்.
தீந்தமிழ் மக்கள் வெந்தார்.

✻

வாயினுற் பேசக் கூட
வரையறை உண்டு, குட்டை
நாயினைக் கொல்லக் கூட
நமக்கொரு நீதி உண்டு.
ஆயினும் தமிழ னென்றால்......
அவனுயிர், உடமை யெல்லாம்
தீயினுல் எரிந்த நீதி
சிங்கள நாட்டில் தர்மம்.

✻

செத்தவர் மூன்று நூறு
சிதைந்தவர் பத்து நூறு
பத்திரப் படுத்தி வைத்த
பணமொரு நூறு கோடி
இத்தனை கணக்கும் யாரில்
எழுதுவ தென்றே, இன்று
கத்துறோம், தமிழ னிங்கு
காற்செருப் பானன் கண்டீர்.

✻

ஐக்கியம் பேசிப் பேசி
அழிந்தவன் தமிழன், நெஞ்சில்
தெக்கிய உணர்வை யெல்லாம்
தேசிய மாக்கிப் பேசி
முக்கிய நாளை யெல்லாம்
முடித்தவன் தமிழன், இன்றும்
நக்கிய மட்டும் நக்கி
நாசமாய்த் தமிழன் போனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் போட்டியை பகிஷ்கரிக்க முடிவு!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மரித்தவர்களுக்காக நிறுவப்பட்ட நினைவுச்சின்னங்கள் இரண்டாவது முறையாகசிதைக்கப்படக் காரணகர்த்தாவாக இருந்தவர் என்ற ஒரே காரணத்துக்காக தமது கல்லூரி விளையாட்டுப் போட்டிக்கு பிரதம அதிதியாக யாழ் அரசாங்க அதிபர் அழைக்கப்படவுள்ளார் என அறிந்ததுமே வேம்படி மகளிர் போர்க் கோலம் பூண்டது சுதந்திரன் வாசகர் அறிந்ததே!

கடந்த ஆகஸ்ட் 16ம் திகதி யாழ் நகரில் பொதுமக்கள் பொலிசாரால் வேட்டையாடப்பட்ட பொழுது தமது கடமையைச் செய்யத்தவறிய அரசாங்க அதிபரை இடமாற்றம் செய்யாவிட்டால் வேலைக்குத் திரும்புவதில்லையென யாழ். கச்சேரி ஊழியர்கள் சூளுரைத்து வேலைநிறுத்தம் செய்ததும் தெரிந்ததே!

இதே அரசாங்க அதிபர்லால் விஜயபாலா பிரதம அதிதியாக எதிர்வரும் 23, 24, 25ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ள பொதுச்சேவை — தனியார் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதால் விளையாட்டு வீரர்கள், மாணவ மாணவிகள் பொதுமக்கள் மேற்படி விளையாட்டுப்போட்டியைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்.

# தமிழர் விடுதலைக் கூட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிலும் 1972-ம் ஆண்டின் புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் முற்றாக நிராகரித்து விட்டனர்.

தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்ட — தமிழ் மக்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாத — சிறீலங்காவின் அரசியலமைப்புக்கு சிங்கள ஆட்சியினர் கொண்டுவரும் திருத்தங்கள் எதுவாக இருந்தாலும், அது சிங்கள தேச மக்களைப் பொறுத்த விடயம்; இதில் தமிழ் ஈழ தேசிய விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்ற மாட்டாது; பங்குபற்றுவது தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட அதே அரசியல் சட்டத்தை ஏற்பது போல ஆகிவிடும் என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்,

கூட்டணி பா. உ. க்களின் சார்பில் எதிர்க்கட்சித்தலைவர் தேசிய அரசுப் பேரவையில் பொதுவாக ஓர் அறிக்கையை வாசித்துவிட்டு, அரசியலமைப்புதிருத்த விவாதத்திலிருந்து விலகிக் கொள்வார்கள் என்று தெரிகிறது.

**சுதந்திரன் முகவரி!**

சுதந்திரனுடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் பின்வரும் தற்காலிக முகவரிக்கு எழுதுமாறு கோரப்படுகின்றனர்.

ஆசிரியர்
சுதந்திரன்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழர் தரும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றுக்குக் குறுக்கே உள்ள புராதன கற்பாலத்தைப் புனர்நிர்மாணம் செய்ய 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படும். இக்கற்பாலம் சிங்கள மன்னர்களால் கட்டப்பட்டதாக சிங்கள மக்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

இது இப்படியிருக்க— தரப்படுத்தலை கைவிடும் அரசின் முடிவை ஆட்சேபித்துள்ள பௌத்த ஸ்தாபனத்துக்குப் பிரதமர் ஜே. ஆர். அனுப்பியுள்ள பதிலில் — பின்வருமாறு ஆலோசனை கூறியுள்ளாராம்:-

''தமிழர்களை பாரபட்சமாக நடத்தும்படி கேட்பதைவிட, தமிழ்பேசும் மக்களை பௌத்தர்களாக மாற்றுவதற்கு குறித்த பௌத்த நிறுவனம் பாடுபடுமானால் அது வரவேற்கத்தக்கது'' என்று பிரதமர் எழுதியுள்ளதாக அரசாங்கப்பத்திரிகையான ஒப்சேவர் எழுதியுள்ளது.

இப்பொழுது காட்சியளிக்கிறது!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

எம். ஜி. ஆர்., டி. ஆர். ராஜகுமாரி, தங்கவேலு,
ஈ. வி. சரோஜா, சந்திரபாபு
நடித்த

குலேபகாவலி

(புத்தம் புதிய கொப்பி)

8வது ஜனத்திரள் வாரமாகக் காட்சியளிக்கிறது!

செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

தினசரி பி. ப. 2. 15, மாலை 6, இரவு 9. 30

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., லதா, பவானி,
தங்கவேலு, நாகேஷ், கண்ணன்
நடித்த

உழைக்கும் கரங்கள்

(ஈஸ்ட்மன் கலர்)

2 வது வாரமாகக் காட்சி தருகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு)

ஜெய்சங்கர், முத்துராமன், பத்மினி, நாகேஷ்
நடித்த
தேவரின்

பெண் தெய்வம்

8வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)

தினசரி பி. ப. 2, மாலை 6, இரவு 9. 30

சிவாஜி கணேசன், தேவிகா, கமலஹாசன்,
ஜெயசித்திரா, மஞ்சுளா, நாகேஷ், நம்பியார்,
எஸ். வி. சுப்பையா
நடித்த

சத்யம்

(ஈஸ்ட்மன் கலர்)

10 வது வாரம்

வெலிங்டன் (யாழ்நகர்)

ஏ. வி. எம். ராஜன், விஜயகுமார், ஜெயசித்திரா
நடித்த

தாயில்லாக் குழந்தை

(ஈஸ்ட்மன் கலர்)

லிடோ (யாழ்ப்பாணம்)

ஜெய்சங்கர், சுஜாதா, நடித்த

நீ ஒரு மகாராணி

இப் பத்திரிகை, சிலோன் நியூஸ் பேப்பேர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1977 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப்பதிவு—வஸ்தியன் [illegible] யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org